செ.வெ.எண்: 28 நாள்: 14.07.2016

## பத்திரிகை செய்தி

வேலைவாய்ப்பகங்களில் பதிவு செய்து உரிய வேலைவாய்ப்பிற்காக காத்திருக்கும் பதிவுதாரர்களுக்கு அரசால் அறிவிக்கப்படும் பணிக்காலியிடங்களுக்கு விதிகளுக்குட்பட்டு பதிவு மூப்பு அடிப்படையில் பரிந்துரைக்கப்பட்டு வருகிறது. பதிவுதாரர்களுக்கு அரசு பணிவாய்ப்பு கிடைக்கும் வரை காத்திருக்காமல் தனியார் வேலைவாய்ப்பிற்கு பல்வேறு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

வரும் 16.07.2016 அன்று தனியார் துறை வேலைவாய்ப்பு முகாம், ஸ்ரீ அம்பாள் திருமண மண்டபம், சிவன் சன்னதி தெரு, கந்தர்வக்கோட்டையில் கனரக வாகனம் உற்பத்தி செய்யும் நிறுவனமான டேம்ளர் இந்தியா பி.லிட், சென்னை, பயிற்சியாளர் பணியிடத்திற்கு பத்தாம் வகுப்பு அல்லது மேல்நிலை வகுப்பு தேர்ச்சி மற்றும் தோல்வி பெற்றவர்கள் 18 முதல் 25 வயதிற்குட்பட்ட ஆண்கள் மட்டும் கலந்து கொள்ள கோரப்படுகிறது. அசல் மற்றும் நகல் சான்றிதழ்கள் (TC, Marksheet, Ration card, Voter ID) 2 பாஸ்போர்ட் அளவு புகைப்படத்துடன் நேரில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது. எனவே, தனியார்துறையில் வேலைவாய்ப்பு பெற விரும்பும் இளைஞர்கள் இவ்வாய்ப்புகளை தவறாமல் பயன்படுத்தி 16.07.2016 அன்று நேர்காணலுக்கு காலை 9.00 மணிக்கு, ஸ்ரீ அம்பாள் திருமண மண்டபம், சிவன் சன்னதி தெரு, கந்தர்வக்கோட்டைக்கு நேரில் சொந்த செலவில் ஆஜராகி பயன்பெறுமாறு புதுக்கோட்டை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், புதுக்கோட்டை.**